**டிசம்பர் – 25**

# TNPSC துளிகள்

- ஆந்திர மாநில முதல்வர் ஒய்.எஸ்.ஜெகன்மோகன் ரெட்டி கடப்பா மாவட்டத்தில் ஒரு எஃகு ஆலையைத் தொடங்குவதற்கு அடிக்கல் நாட்டியுள்ளார்.
    - இந்த ஆலைக்குத் தேவையான இரும்புத் தாதுவை தேசியக் கனிம வள மேம்பாட்டுக் கழகமானது (National Mineral Development Corporation - NMDC) வழங்க உள்ளது.
- தோஹாவில் நடந்த 6வது கத்தார் சர்வதேசக் கோப்பை போட்டியில் இந்தியாவின் பளு தூக்கும் வீராங்கனையான சைகோம் மீராபாய் சானு தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.
- ஆந்திர மாநில முதல்வர் ஒய்.எஸ்.ஜெகன்மோகன் ரெட்டி ‘ஒய்.எஸ்.ஆர் நேதன்னா நேஸ்தம்’ என்ற திட்டத்தை அறிமுகப் படுத்தியுள்ளார்.
    - இத்திட்டத்தின் கீழ், ஆந்திர மாநில அரசானது மாநிலம் முழுவதும் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு ஆண்டுதோறும் ரூ.24,000 நிதி உதவி வழங்கத் திட்டமிட்டுள்ளது.

# தேசியச் செய்திகள்

## நல் ஆளுகைக் குறியீடு

- 2019 ஆம் ஆண்டு டிசம்பர் 25 ஆம் தேதியன்று இந்திய அரசு நல் ஆளுகைக் குறியீட்டை அறிமுகப் படுத்தியுள்ளது.
- மொத்தமுள்ள மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களானவை பெரிய குழுக்கள், வடகிழக்கு & மலைப் பிரதேச மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள் என 3 குழுக்களாகப் பிரிக்கப் பட்டுள்ளன.
- “பெரிய மாநிலங்கள்” பிரிவின் நல் ஆளுகைக் குறியீட்டில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது.
- அதைத் தொடர்ந்து மகாராஷ்டிரா, கர்நாடகா, சத்தீஸ்கர் மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் இடம் பெற்றுள்ளன.
- நல் ஆளுகைக் குறியீட்டில் ஜார்க்கண்ட் மாநிலமானது கடைசி இடத்தைப் பிடித்துள்ளது.
- வேளாண்மை மற்றும் அதனுடன் தொடர்புடைய தரவரிசையில், மத்தியப் பிரதேசம், மிசோரம் மற்றும் டாமன் & டையூ ஆகியவை சிறப்பாக செயல்பட்ட மாநிலங்களாக உள்ளன.




Good Governance Day – 25 December 2019

**State of governance**

| Rank | Big states | Score | Rank | Big states | Score |
|---|---|---|---|---|---|
| 1 | Tamil Nadu | 5.62 | 10 | West Bengal | 4.84 |
| 2 | Maharashtra | 5.40 | 11 | Telangana | 4.83 |
| 3 | Karnataka | 5.10 | 12 | Rajasthan | 4.8 |
| 4 | Chhattisgarh | 5.05 | 13 | Punjab | 4.57 |
| 5 | Andhra Pradesh | 5.05 | 14 | Orissa | 4.44 |
| 6 | Gujarat | 5.04 | 15 | Bihar | 4.40 |
| 7 | Haryana | 5.00 | 16 | Goa | 4.29 |
| 8 | Kerala | 4.98 | 17 | Uttar Pradesh | 4.25 |
| 9 | Madhya Pradesh | 4.85 | 18 | Jharkhand | 4.23 |

## FSSAI குறியிடல் முறையிலிருந்து FoPL நீக்கம்

- இந்திய உணவுப் பாதுகாப்புத் தர நிர்ணயச் சங்கம் (Food Safety Standards Association of India - FSSAI) அதன் பொதுக் குறியிடல் ஒழுங்குமுறையிலிருந்துப் பொட்டல முகப்புக் குறியிடல் முறை (Front Of Packet Labelling - FoPL) நீக்கப்படும் என்று அறிவித்துள்ளது.
- FoPL ஆனது கொழுப்பு, சர்க்கரை மற்றும் உப்பு அளவுகள் அதிகம் உள்ள உணவுப் பொருட்கள் குறித்து நுகர்வோருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது.
- இது பச்சை (சைவ உணவுகள்) மற்றும் சிவப்பு (அசைவ உணவுகள்) உணவு வகைகளை நுகர்வோருக்கு அடையாளம் காண உதவுகின்றது.
- இதில் உணவு ஊட்டச்சத்துக்கள் மற்றும் சுருக்கக் குறிகாட்டிகள் போன்றவற்றின் சித்திரப் பிரதிநிதித்துவமும் அடங்கும்.

***FoPL பற்றி***

- FoPL என்பது நுகர்வோருக்கு ஆரோக்கியமான உணவுகளைத் தேர்வு செய்ய உதவும் வகையிலான கருவியாகும்.
- இது இந்தியாவில் 2019 ஆம் ஆண்டு உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிலை (குறியிடல் மற்றும் காட்சிப்படுத்துதல்) விதிமுறைகள் என்பதின் வரைவுக்குள் சேர்க்கப் பட்டுள்ளது.

## தேசிய மக்கள்தொகைப் பதிவேடு

- மேற்கு வங்காளம் மற்றும் கேரளா ஆகிய மாநிலங்கள் தேசிய மக்கள்தொகைப் பதிவேட்டை (National Population Register - NPR) புதுப்பிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் நிறுத்தி வைக்க முடிவு செய்துள்ளன.
- NPR என்பது நாட்டில் உள்ள வழக்கமான குடியிருப்பாளர்களின் விவரங்கள் அடங்கிய ஒரு மொத்தப் பதிவேடு ஆகும்.
- NPR தரவுதளத்தில் மக்கள்தொகை மற்றும் உயிர்த்தரவு விவரங்கள் இருக்கும்.
- NPR விதிமுறைகளின் படி, 18 வயதுக்கு மேற்பட்ட நபர்களுக்கு ஒரு குடியுரிமை அடையாள அட்டை (Resident Identity Card - RIC) வழங்கப் படும்.
- இது நாட்டில் உள்ள அனைத்து மக்களின் விரிவான அடையாள தரவுதளத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது 1955 ஆம் ஆண்டின் குடியுரிமைச் சட்டம் மற்றும் 2003 ஆம் ஆண்டின் குடியுரிமை (குடிமக்களைப் பதிவு செய்தல் மற்றும் தேசிய அடையாள அட்டைகளின் வெளியீடு) விதிகள் ஆகியவற்றின் கீழ் உள்ளூர் (கிராமம்/துணைநிலை நகரம்), துணைநிலை மாவட்டம், மாவட்டம், மாநிலம் மற்றும் தேசிய அளவில் தயாரிக்கப் படுகின்றது.
- இந்தியாவில் உள்ள ஒவ்வொரு வழக்கமான குடியிருப்பாளரும் NPRல் பதிவு செய்வது கட்டாயமாகும்.
- NPR இன் நோக்கங்களுக்காக ஒரு குடியிருப்பாளர் என்பவர் கடந்த 6 மாதங்கள்/அதற்கு மேற்பட்ட காலத்திற்கு உள்ளூர்ப் பகுதியில் வசித்த ஒரு நபர் அல்லது அடுத்த 6 மாதங்கள்/அதற்கு மேற்பட்ட காலத்திற்கு அந்த பகுதியில் வசிக்க விரும்பும் ஒரு நபர் என வரையறுக்கப் படுகின்றார்.



## இந்தியாவின் முதலாவது நீண்ட தூர CNG பேருந்து

- பெட்ரோலிய மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சர் தர்மேந்திர பிரதான் இந்தியாவின் முதலாவது நீண்ட தூர அழுக்கப்பட்ட இயற்கை வாயுவினை (compressed natural gas -CNG) கொண்ட உருளைகளுடன் இணைக்கப்பட்ட CNG பேருந்தை புது தில்லியில் தொடங்கி வைத்தார்.
- ஒரு முறை நிரப்பப்பட்ட எரிவாயுவின் மூலம் இந்தப் பேருந்து 1000 கிலோமீட்டர் தூரம் பயணிக்க முடியும்.
- மாநிலங்களுக்கிடையேப் பயணிக்கும் வகையில் அமைந்த இந்த நீண்ட தூர CNG பேருந்தானது தில்லியில் இருந்து டேராடூனுக்கு இயங்க உள்ளது.



## அடல் புஜல் யோஜனா

- பிரதமர் நரேந்திர மோடி புது தில்லியில் அடல் புஜல் யோஜனா என்ற திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
- இது நிலத்தடி நீர் வளங்களை நீடித்த முறையில் நிர்வகிப்பதற்கான ஒரு திட்டமாகும்.
- மறைந்த முன்னாள் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயின் 95வது பிறந்த நாளை முன்னிட்டு இந்தத் திட்டமானது தொடங்கப் பட்டுள்ளது.
- இந்த நிகழ்வில், ரோத்தங் கணவாயில் உள்ள 8.8 கிலோமீட்டர் நீளமுள்ள ஒரு உத்தி சார்ந்த சுரங்கப் பாதைக்கு வாஜ்பாயின் பெயர் சூட்டப் பட்டுள்ளது.

### *திட்டம் பற்றி:*

- 2024 ஆம் ஆண்டுக்குள் ஒவ்வொரு வீட்டிற்கும் குடி தண்ணீர் வழங்க இந்தத் திட்டம் உதவ இருக்கின்றது.
- மத்திய ஜல் சக்தி என்ற அமைச்சகத்தின் கீழ் உள்ள நீர்வளத் துறையானது இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த இருக்கின்றது.
- இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும் காலம் 2020 முதல் 2025 ஆண்டு வரை ஆகும்.
- உலக வங்கியின் கடன் மற்றும் மத்திய அரசின் நிதியுதவி உள்ளிட்ட முழு நிதியும் மாநிலங்களுக்கு மானியமாக வழங்கப்பட இருக்கின்றது.

### *ரோத்தங் சுரங்கப் பாதை*

- இது இமயமலையின் கிழக்குப் பகுதியில் உள்ள பீர் பாஞ்சல் மலைத்தொடரில் லே-மணாலி நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது.
- லடாக் செல்லும் இரண்டு பாதைகளில் இதுவும் ஒன்றாகும்.

- ரோத்தங் கணவாயானது குளிர்காலங்களில் கடுமையான பனிப்பொழிவு மற்றும் பனிப் புயல்களைப் பெறுகின்றது. ஒரு வருடத்தில் நான்கு மாதங்கள் மட்டுமே இந்த சாலைப் போக்குவரத்து திறந்து விடப்படுகின்றது.
- குளிர்காலத்தில் சுரங்கப் பாதை நெடுஞ்சாலையானது திறந்து வைக்கப் பட்டிருக்கும்.

# சர்வதேசச் செய்திகள்

## காங்கோவில் மீண்டும் வெளிப்படும் எபோலா தொற்று

- கிழக்கு காங்கோவில் உள்ள சுகாதார அதிகாரிகள் எபோலா தொற்றுநோய் மீண்டும் பரவத் தொடங்கியுள்ளதைக் கண்டறிந்துள்ளனர்.
- எபோலா ரத்தக் கசிவுக் காய்ச்சல் என்று அழைக்கப்பட்ட எபோலா வைரஸ் நோயானது காட்டு விலங்குகளிடமிருந்து மனிதனுக்குப் பரவுகின்றது.
- டெரோபோடிடே குடும்பத்தைச் சேர்ந்த பழ வௌவால்களானவை இயற்கையாகவே எபோலா வைரஸ் கடத்திகளாகச் செயல்படுகின்றன.

## மானுவல் மர்ரெரோ குரூஸ் - கியூபாவின் முதல் பிரதமர்

- 40 ஆண்டுகளுக்குப் பிறகு கியூபா நாட்டின் முதலாவது பிரதமராக மானுவல் மர்ரெரோ குரூஸ் என்பவரை அந்நாட்டின் குடியரசுத் தலைவர் மிகுவல் தியாஸ்-கேனலால் நியமித்துள்ளார்.
- பிரதம மந்திரி பதவியானது 1976 ஆம் ஆண்டில் அப்போதைய புரட்சிகரத் தலைவரும் கியூபாவின் கடைசிப் பிரதம மந்திரியுமான பிடல் காஸ்ட்ரோவால் நீக்கப்பட்டது.
- கியூபாவில் 2019 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் புதிதாக நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்பு விதிகளின் கீழ் பிரதமர் பதவி மீண்டும் நிலை நிறுத்தப் பட்டுள்ளது.

## அமெரிக்கா - மெக்சிகோ - கனடா ஒப்பந்தம்

- அமெரிக்காவின் பிரதிநிதிகள் சபையானது 1994 ஆம் ஆண்டின் நாஃப்டா (North American Free Trade Agreement - NAFTA) அல்லது வட அமெரிக்கத் தடையில்லா வர்த்தக ஒப்பந்தத்திற்கு மாற்று ஒப்பந்தமான அமெரிக்கா-மெக்ஸிகோ-கனடா என்ற ஒப்பந்தத்தினை நிறைவேற்றியுள்ளது.
- இந்தப் புதிய ஒப்பந்தத்தில் கண்டிப்பான தொழிலாளர் விதிகள் மற்றும் சுற்றுச்சூழல் கூறுகள் ஆகியவை இணைக்கப் பட்டுள்ளன.
- இது அடிப்படையில் நாஃப்டா 2.0 ஒப்பந்தமாகும்.
- கனடா, மெக்ஸிகோ மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் கையெழுத்திட்ட ஒரு ஒப்பந்தமான வட அமெரிக்கத் தடையில்லா வர்த்தக உடன்படிக்கைக்கான ஆரம்பம் நாஃப்டா என்ற ஒப்பந்தம் ஆகும்.
- 1994 ஆம் ஆண்டு பில் கிளிண்டன் அதிபராக இருந்த போது நாஃப்டா ஒப்பந்தமானது இறுதி செய்யப்பட்டு நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது.

## இராணுவ விண்வெளிப் படை

- அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் 2020 ஆம் ஆண்டு தேசியப் பாதுகாப்பு அங்கீகாரச் சட்டத்தின் கீழ் வாஷிங்டனுக்கு அருகிலுள்ள ஒரு இராணுவத் தளத்தில் அமெரிக்க இராணுவ 'விண்வெளிப் படையை' அதிகாரப் பூர்வமாக தொடங்கி

வைத்துள்ளார்.

- இந்த விண்வெளிப் படையானது அந்நாட்டில் உள்ள ஆயுதப் படைகளின் ஆறாவது கிளையாக அமைய இருக்கின்றது.
- இது விமானப் படையின் ஒரு பகுதியாக இருக்கும்.

***விண்வெளிப் படை பற்றி***

- ரஷ்யா மற்றும் சீனா போன்ற நாடுகளைப் போலவே விண்வெளியினை ஒரு "போர் நடத்துவதற்கு உகந்த களமாக" மாற்றுவதற்கான முயற்சிகள் இதன் மூலம் மேற்கொள்ளப்பட இருக்கின்றன.
- விண்வெளிப் படையின் முக்கியக் குறிக்கோளானது விண்வெளிக் களத்தில் அமெரிக்காவின் ஆதிக்கத்தை விரிவாக்குவதாகும்.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## எத்தியோப்பியாவின் முதல் செயற்கைக் கோள் / ETRSS-1

- எத்தியோப்பியாவின் தொலையுணர்வி செயற்கைக் கோள் -1 அல்லது ETRSS -1, சீன லாங் மார்ச் 4B ஏவு ராக்கெட் மூலம் விண்வெளிக்கு ஏவப்பட்டது.
- ETRSS -1 என்பது ஆப்பிரிக்கக் கண்டத்தில் விண்வெளிக்கு அனுப்பப்பட்ட 41வது செயற்கைக் கோள் மற்றும் மூன்றாவது கிழக்கு ஆப்பிரிக்க செயற்கைக் கோள் ஆகும்.
- எத்தியோப்பியா ஆனது செயற்கைக் கோளை விண்ணில் செலுத்திய 11வது ஆப்பிரிக்க நாடாக உருவெடுத்துள்ளது.

# மாநிலச் செய்திகள்

## அசாமி மொழி - அசாமின் மாநில மொழி

- அசாமி மொழியை அசாமின் மாநில மொழியாக மாற்றுவதற்கு அசாம் அமைச்சரவையானது ஒப்புதல் அளித்துள்ளது.
- இதிலிருந்து BTAD (போடோலாந்து பிராந்திய நிர்வாக மாவட்டங்கள்), பராக் பள்ளத்தாக்கு மற்றும் அசாமின் மலை மாவட்டங்களுக்கு விலக்கு அளிக்கப் பட்டுள்ளது.
- தற்போது அசாம் மாநிலத்தின் அதிகாரப்பூர்வ மொழிகளாக அசாமி மற்றும் போடோ ஆகிய மொழிகள் உள்ளன.
- பராக் பள்ளத்தாக்கிலுள்ள அசாமின் சில மாவட்டங்கள் வங்காள மொழியை அலுவல் மொழியாகப் பயன்படுத்துகின்றன.

- சரத்து 345 ஆனது ஒரு மாநில சட்டமன்றம் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளை அலுவல் மொழிகளாகப் பயன்படுத்தலாம் என்று கூறுகின்றது.

# முக்கிய தினங்கள்

## தேசிய நுகர்வோர் உரிமை தினம் - டிசம்பர் 24

- 1986 ஆம் ஆண்டின் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்ற தினமே இத்தினமாகும்.
- 2019 ஆம் ஆண்டுக்கான கருப்பொருள் "நுகர்வோர் எதிர்கொள்ளும் குறைகள் / பிரச்சனைகளுக்கான மாற்று நிவாரணம் அளித்தல்".
- 1986 ஆம் ஆண்டின் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் உள்ள உரிமைகளானவை இந்திய அரசியலமைப்பின் சரத்து 14 முதல் 19 வரை குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகளிலிருந்துப் பெறப்பட்டவை ஆகும்.
- தேசிய நுகர்வோர் உதவி மைய எண் 1800 -11 - 4000 அல்லது 14404.
- உலக நுகர்வோர் உரிமைகள் தினமானது மார்ச் 15 ஆம் தேதியன்று அனுசரிக்கப் படுகின்றது.
- இந்தச் சட்டத்தின் கீழ் பின்வரும் ஆறு நுகர்வோர் உரிமைகளை நுகர்வோர் கொண்டுள்ளனர்:
    - பாதுகாப்புக்கான உரிமை
    - தகவல் அறியும் உரிமை
    - தேர்ந்தெடுக்கும் உரிமை
    - கேட்கும் உரிமை
    - நிவாரணம் பெறும் உரிமை
    - நுகர்வோர் கல்விக்கான உரிமை.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★